**சார்பு நீதிமன்றம், திருவாரூர்**

முன்னிலை- **திரு.M.முருகன், M.L.,**

**சார்பு நீதிபதி, திருவாரூர்.**

2025-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 04-ம் நாள் வியாழன் கிழமை.

(திருவள்ளுவராண்டு 2056, ஸ்ரீ விசுவாவசு வருடம், ஆவணித்திங்கள் 19 ஆம் நாள்)

**அசல் வழக்கு எண்.9/2025**

**(CNR.NO.TNTV03-000699-2024)**

S.வெற்றிவேலன் .. வாதி

// எதிராக //

B.வாணி .. பிரதிவாதி

இவ்வழக்கு இறுதியாக கடந்த 08.08.2025-ம் தேதி விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.சதாசிவம் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.மாரிமுத்து மற்றும் ஒருவர் ஆஜராகியிருந்த போதும் எதிருரை தாக்கல் செய்யாததாலும், அழைப்பாணை பெற்றுக்கொண்ட பிரதிவாதியை இந்நீதிமன்றத்தில் அழைத்த போது ஆஜராகததாலும், அவருக்காக யாரும் முன்னிலையாகததாலும் கடந்த 23.04.2025 ஆம் தேதி இத்தாவாவில் ஒருதலைபட்ச உத்தரவுக்கு உள்ளாக்கப்பட்டும், வாதி தரப்பு வாதுரை கேட்கப்பட்டும், சாட்சிய, சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து, இவ்வழக்கில் இன்றே இந்நீதிமன்றம் இறுதியாக வழங்கும்.

**தீர்ப்புரை**

தாவா தொகை ரூ.700000/--யும், மேற்படி தொகைக்கு தாவா தாக்கலான தேதியிலிருந்து தொகை முழுவதும் செல்லாகும் வரை 6% ஆண்டு பின்வட்டியும் மற்றும் தாவா செலவுத் தொகையும் வாதிக்கு, பிரதிவாதியால் கிடைக்கும்படி, தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பிறப்பிக்க வேண்டி வாதியால் இத்தாவா.

2. **<u>தாவா வழக்குரையின் சுருக்கம்</u>** :-

இவ்வழக்கின் வாதியும், பிரதிவாதியும் ஒரே துறையில் பணிபுரிந்ததன் அடிப்படையில் பிரதிவாதி வாதியிடம் தனது அவசர தேவைக்காக கடந்த 26.05.2022 ஆம் தேதி ரூ.2,00,000/-னையும் கடந்த 13.06.2022-ல் ரூ.500000/-மும் வாதியிடம் கடனாக பெற்றுக்கொண்டார். மேற்படி கடனுக்கு 26.05.2022-லும் 13.06.2022-லும் பிரதிவாதி 2 கை லெட்டர்கள் எழுதி கொடுத்தார் என்றும் 26.05.2022 தேதியிட்ட கை லெட்டரில் 4 மாத காலக்கெடுவிலும் 13.06.2022 தேதியிட்ட கை லெட்டரில் 6 மாத காலக் கெடுவிலும் வாதிக்கு தொகை திருப்பி தர ஒப்புக்கொண்டார் என்றும் வாதி தன்னிடம் பெற்ற கடனை பிரதிவாதியிடம் திரும்ப கேட்ட போது பிரதிவாதியானவர் 23.09.2024 ஆம் தேதியிட்ட தனது பெயரிலுள்ள இந்தியன் ஓவர்சீஸ் வங்கி காசோலைகள் இரண்டில் ரூ.4,00,000/-த்தையும் ரூ.300000/-யும் நிரப்பி வாதிக்கு வழங்கினார். மேற்படி காசோலையை SBI வங்கி, திருவாரூர் கிளையில், தனது வங்கி கணக்கில் வசூலுக்காக தாக்கல் செய்தார். மேற்படி காசோலை பணமாக்கப்படாமல் பிரதிவாதியின் வங்கி கணக்கில் போதிய பணம் இல்லை எனச் சொல்லி வங்கி திருப்புதல் குறிப்பாணையுடன் திருப்பப்பட்டது. அது சம்பந்தமாக தனது வழக்கறிஞர் மூலம், அறிவிப்பை பெற்றுக் கொண்டு தொகையை 14 நாட்களுக்குள் திரும்ப செலுத்தும்படி கோரி பிரதிவாதிக்கு கடந்த 01.10.2024 ஆம் தேதி வாதி அறிவிப்பு அனுப்பி வைத்தார். அந்த அறிவிப்பினை பிரதிவாதி பெற்றுக் கொண்டார். மேற்படி அறிவிப்புக்கு பிரதிவாதி தொகையை தர மறுத்து பொய்யான சங்கதிகளை கொண்டு 11.11..2024 ல் பதில் அறிவிப்பும் பிரதிவாதி அனுப்பினார். மேற்படி பதில் அறிவிப்பில் பிரதிவாதியின் கணவர் நண்பர் ஹரிஷ் என்பவருக்கு ஏோ பண தொடர்பு இருப்பதாகவும், கையெழுத்திட்ட காசோலைகளை அவர் கணவரின் நண்பர் ஹரிஷ் வசம் கொடுத்ததாகவும் சொல்லியிருப்பது உண்மையல்ல என்றும் மேலும் வாதியும் ஹரிஷ் என்பவரும் ஒன்றாக கூடி மோசடியாக 26.05.2022 மற்றும்

13.06.2022 தேதிகளில் கைலெட்டர் தயார் செய்திருப்பதாக சொல்லியிருப்பது உண்மையல்ல என்றும் பதிலறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றும் எனவே பிரதிவாதி மேற்படி தொகையை வட்டியுடன் செலுத்த கடமைப்பட்டவர். பிரதிவாதி விவசாயி அல்ல. தமிழக கடன் நிவாரணச் சட்டத்தின் கீழான பலன்கள் எதையும் பெறத்தக்கவர் அல்லார். எனவே தாவா பரிகாரங்கள் கோரி வாதியால் இத்தாவா.

3. இத்தாவா சம்பந்தமாக அறிவிப்பு பெற்றுக் கொண்ட பிரதிவாதி, இந்நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகவில்லை. அவருக்காக யாரும் முன்னிலையாகவில்லை. அதனால் அவரை இத்தாவாவில் கடந்த 23.04.2025 ஆம் தேதி ஒருதலைப்பட்ச உத்தரவுக்கு உள்ளாக்கப்பட்டார்.

4. இத்தாவாவில் வாதி தரப்பில், வாதி திரு.வெற்றிவேலன் என்பவரை வா.சா.1 ஆக, முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் 13 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5. **இத்தாவாவில் கீழ்கண்ட பிரச்சனைகளுக்கு முடிவு காண வேண்டியது அவசியம் ஆகின்றது.**

அ. தாவா காசோலையானது தாவா வழக்குரையில் சொல்லப்பட்டது போல பிரதிவாதியால் தகுந்த மறுபயனுக்காக வாதிக்கு வழங்கப்பட்டதா ?

ஆ. தாவா வழக்குரையில் கோரியது போல வாதி தாவா தொகையை பெற உகந்தவரா ?

இ. வாதிக்கு கிடைக்கும் வேறு பரிகாரம் என்ன ?

6. **<u>பிரச்சனைகள் அ மற்றும் ஆ</u>**

i) இவ்வழக்கின் பிரதிவாதி தனது அவசர தேவைக்காக, கடந்த 26.05.2022 ஆம் தேதி ரூ.2,00,000 னையும், கடந்த 13.0.2022 ஆம் தேதி ரூ.300000/-யும் வாதியிடம் கடனாக பெற்றுக்கொண்டார். வாதி கடன் தொகையான ரூ.7,00,000/-த்தை திரும்ப செலுத்தும்படி வாதி கோரியதற்கு, இந்தியன் ஓவர்சீஸ் வங்கிக்கான ரூ.7,00,000/-கான 23.09.2024 என்ற பின்தேதியிட்ட 2 காசோலைகளை, பிரதிவாதி வாதிக்கு வழங்கினார். மேற்படி காசோலையை வாதி தனது வங்கி கணக்கில் வசூலுக்காக தாக்கல் செய்தார். மேற்படி காசோலை பணமாக்கப்படாமல் பிரதிவாதியின் வங்கி கணக்கில் போதிய பணம் இல்லை எனச்சொல்லி கடந்த 23.09.2024 ஆம் தேதி வா.சா.ஆ.4 ஆன வங்கி திருப்புதல் குறிப்பாணையுடன் திருப்பப்பட்டது. அது சம்பந்தமாக தனது வழக்கறிஞர் மூலம், தொகையை திரும்ப செலுத்தக்கோரி, பிரதிவாதிக்கு கடந்த 01.10.2024 ம் தேதி வாதி அறிவிப்பினை அனுப்பி வைத்தார். அந்த அறிவிப்பின் அலுவலக நகல் வா,சா.ஆ.9. அந்த அறிவிப்பினை பிரதிவாதி பெற்றுக் கொண்டார். மேற்படி அறிவிப்புக்கு பிரதிவாதி அனுப்பிய பதில் அறிவிப்பு வா.சா.ஆ.12. மேற்படி அறிவிப்பில் கண்டபடி தொகை எதையும் பிரதிவாதி செலுத்தவில்லை. பிரதிவாதி மேற்படி தொகையை வட்டியுடன் செலுத்த கடமைப்பட்டவர். எனவே இத்தாவா தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது என வழக்குரைத்த சங்கதியை ஒத்து வாதியான வா.சா.1 சாட்சியமளித்துள்ளார்.

ii) இவ்வாறு இத்தாவாவில் வாதியால் வழக்குரைக்கப்பட்ட சங்கதியானது, வாதி தரப்பில் வா,சா.1-ன் சாட்சியம் மூலமும், வா.சா.ஆ.1 முதல் 13 வரையிலான சான்றாவணங்கள் மூலமும் ஒன்றுக்கொன்று தொடர்புடைய வகையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில் எந்தவித சாட்சிய சான்றாவணங்களும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

iii) வாதியான வா,சா.1 - ன் சாட்சியம், வாதி தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட வா.சா.ஆ.1 முதல் 13 வரையிலான சான்றாவணங்களையும் ஒருங்கே பரிசீலனைக்கையில், வாதியிடம் பெற்றக் கடனை தீர்க்கும் வகையில் பிரதிவாதியே தனது வங்கி கணக்குக்குரிய வா.சா.ஆ.3 மற்றும் 4 ஆன காசோலைகளை வாதிக்கு வழங்கியது புலனாகின்றது. மேலும் மேற்படி காசோலைகளை வாதி வசூலுக்காக தாக்கல் செய்து, பணமாக்கபடாமல் திருப்பப்பட்டது குறித்து, வாதி பிரதிவாதிக்கு அறிவிப்பு அனுப்பி வைக்கப்பட்ட பின்னரும், பிரதிவாதி தொகை எதுவும் வாதிக்கு செலுத்தவில்லை என்பதும் புலனாகின்றது. மேலும் இத்தாவா காலவரம்பு தோஷத்தால் பாதிக்கப்படவில்லை என்பதும் புலனாகின்றது. எனவே மேற்கண்ட வழக்கு சூழ்நிலையில், தாவா காசோலையானது தாவா வழக்குரையில் சொல்லப்பட்டது போல பிரதிவாதியால் தகுந்த மறுபயனுக்காக வாதிக்கு வழங்கப்பட்டதுதான் என முடிவு கண்டு பிரச்சனை அ- க்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கின்றது. அதனைத் தொடர்ந்து வாதி தாவா வழக்குரையில் கோரியது போல் தாவா தொகையை பெற உகந்தவர் என்றும் முடிவு கண்டு பிரச்சனை ஆ-க்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கின்றது.

7. பிரச்சனை 3

இந்த தாவா தாக்கல் செய்ய பிரதிவாதி காரணமாக இருந்ததால் தாவா செலவுத் தொகையினை வாதிக்கு செலுத்த கடமைப்பட்டவர் ஆகிறார். எனவே இதர பரிகாரமாக தாவா செலவுத் தொகையினை பிரதிவாதியிடமிருந்து வாதி பெறத்தக்கவர் என முடிவு கண்டு, பிரச்சனை இ – க்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கின்றது.

**தீர்ப்பு பகரப்பட்டது. இறுதியாக, வாதிக்கு, பிரதிவாதி தாவா தொகை ரூ.700000/- க்கு தாவா தாக்கலான தேதியிலிருந்து, தொகை முழுவதும் செல்லாகும் வரை 6% ஆண்டு வட்டியும் மற்றும் தாவா செலவுத் தொகையையும் செலுத்தவேண்டும் என்று உத்தரவிட்டு இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.**

இந்த தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2025-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 04-ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

MURUGAN M
Digitally signed by MURUGAN M
Date: 2025.09.04 14:44:42 +0530

சார்பு நீதிபதி,
திருவாரூர்.

**வாதி தரப்பு சாட்சிகள்:-**

வா.சா.1 – திரு. வெற்றிவேலன் (வாதி)

**வாதி தரப்பு சான்றாவணங்கள்:-**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 26.05.2022 | பிரதிவாதி வாதிக்கு எழுதிக் கொடுத்த கை லெட்டர் - அசல் |
| வா.சா.ஆ.2 | 13.06.2022 | பிரதிவாதி வாதிக்கு எழுதிக் கொடுத்த கை லெட்டர் - அசல் |
| வா.சா.ஆ.3 | 23.09.2024 | பிரதிவாதி வாதியிடம் வாங்கிய ரூ.400000/-க்கான காசோலையை வாதி தனது வங்கியில் வசூலுக்காக தாக்கல் செய்த போது போதிய பணம் இல்லை என திருப்பட்டதற்கான வங்கி திருப்புதல் குறிப்பாணை - அசல் |
| வா.சா.ஆ.4 | 23.09.2024 | பிரதிவாதி வாதியிடம் வாங்கிய ரூ.300000/-க்கான காசோலையை வாதி தனது வங்கியில் வசூலுக்காக தாக்கல் செய்த போது போதிய பணம் இல்லை என திருப்பட்டதற்கான வங்கி திருப்புதல் குறிப்பாணை - அசல் |
| வா.சா.ஆ.5 | 23.09.2024 | பிரதிவாதி கொடுத்த காசோலை வாதி காசாக்க தாக்கல் செய்த செல்லான் அடிக்கட்டை காசோலை எண்.540987 - அசல் |
| வா.சா.ஆ.6 | 23.09.2024 | பிரதிவாதி கொடுத்த காசோலை வாதி காசாக்க தாக்கல் செய்த செல்லான் அடிக்கட்டை காசோலை எண்.845981 - அசல் |
| வா.சா.ஆ.7 | 23.09.2024 | SBI வங்கி திருப்பி அனுப்பிய ரிட்டன் மெமோ காசோலை எண்.540987 - அசல் |
| வா.சா.ஆ.8 | 24.09.2024 | SBI வங்கி திருப்பி அனுப்பிய ரிட்டன் மெமோ காசோலை எண்.845981 - அசல் |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.9 | 01.10.2024 | வாதி பிரதிவாதிக்கு வழங்கிய வழக்கறிஞர் அறிவிப்பு- அலுவலக நகல் |
| வா.சா.ஆ.10 | -- | மேற்படி அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக் கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை - அசல் |
| வா.சா.ஆ.11 | --- | மேற்படி அறிவிப்பை பிரதிவாதியின் கணவர் பாரதசெல்வன் கையொப்பமிட்டு பெற்றுக் கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை - அசல் |
| வா.சா.ஆ.12 | 11.11.2024 | மேற்படி சட்ட அறிவிப்பிற்கு பிரதிவாதி அனுப்பிய பதிலறிவிப்பு அசல் |
| வா.சா.ஆ.13 | -- | வாதியின் ஆதார் அட்டை - அசலுடன் சரிபார்க்கப்பட்ட நகல் |

**பிரதிவாதி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்**:- இல்லை.

MURUGAN M Digitally signed by MURUGAN M Date: 2025.09.04 14:44:46 +0530

சார்பு நீதிபதி,

திருவாரூர்.